**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8120327

1. District : மாவட்டம் சிவகங்கை | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 12/2024 | Date: நாள் 15.11.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act (1988) as amended by the P.C. (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7(a) and 12
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15.11.2024 | Date from : நாள் முதல் 12/11/2024 | Date to : நாள் வரை 14/11/2024
Time Period : நேர அளவு தேதிகள் 10 நாட்களுக்கு முன்பு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.11.2024 | Time : நேரம் 07.15 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் V01 III | Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கே 60 Km வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி எண் 02 இணை சார்பதிவாளர் அலுவலகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் த. வைரவேல் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தியாகராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41 வயது | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் நகை தொழிலகம் | (g) Address : முகவரி எண் : 7, கண்டனூர் ரோடு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. முத்துபாண்டி, சார்பதிவாளர், எண்: 2 இணை சார்பதிவாளர் அலுவலகம், காரைக்குடி
2) திருமதி. புவனப்பிரியா, ஆவண எழுத்தர், காரைக்குடி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 15.11.2024 தேதி 07.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, கண்டனூர் ரோடு, க.எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் தியாகராஜன் என்பவரின் மகன் திரு.தி.வைரவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி எண்.2 இணை சார்பதிவக சார்பதிவாளர் திரு.முத்துப்பாண்டி மற்றும் ஆவண எழுத்தர் திருமதி.புவனப்பிரியா ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 15.11.2024-ம் தேதி காலை 08.00 மணிக்கு, சிவகங்கை

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15-11-2024 | [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15/11/2024
0830 hrs

Name: பெயர் A. ஜான் பிரைட்டோ,
Rank: நிலை காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிவகங்கை. No. எண் ..........

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.12/2024 u/s.7(a) and 12 of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், தி.வைரவேல், த/பெ.தியாகராஜன், எண்.7, கண்டனூர் ரோடு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம். பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 20 ஆண்டுகளாக காரைக்குடியில், நகை தொழிலகம் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். நான் கடந்த 2020ம் ஆண்டு காரைக்குடி வட்டம், அரியக்குடி கிராமத்தில் சர்வே எண்.267/7A-இல் உள்ள சுமார் 5 ஏக்கர் புஞ்சை இடத்தை எனது பெயரில் கிரையம் வாங்கினேன். அந்த இடத்திலிருந்து 61 செண்ட் புஞ்சை இடத்தை திரு.முத்துவேல், திரு.கல்யாணசுந்தரம், திரு.அப்பாவு ஆகியோருக்கும், 60 செண்ட் புஞ்சை இடத்தை திரு.அப்பாவு, திரு.முத்துவேல், திரு.கல்யாணசுந்தரம் மற்றும் திரு.பாலமுருகன் ஆகியோருக்கும், 50 செண்ட் புஞ்சை இடத்தை திரு.முத்துவேல், திரு.பாலமுருகன் ஆகியோருக்கும் மற்றுமொரு 50 செண்ட் புஞ்சை இடத்தை திரு.கல்யாணசுந்தரம், திரு.ரமேஸ் ஆகியோருக்கும் விற்பனை செய்ய உள்ள நிலையில், அவர்கள் என்னிடம் பத்திரத்தை ரெடி பண்ணுமாறு பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தனர். எனவே, சுமார் 10 நாட்களுக்கு முன்பு, மேற்படி கிரையங்களுக்கு காரைக்குடி எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்வதற்கு ஆவணங்களை தயார் செய்ய, ஆவண எழுத்தர் திருமதி.புவனப்பிரியா என்பவரை சந்தித்து, ஆவணங்களை தயார் செய்ய சொன்னேன். பின்னர் அவரிடம் பத்திர செலவு பற்றி கேட்கும்போது, அவர் என்னிடம் நார்மலா 1 பத்திரம் பதிவதற்கு ரூ.5000/- வீதம் 4 பத்திரத்திற்கு மொத்தம் ரூ.20,000/- சப்ரிஜிஸ்டராருக்கு கொடுக்கணும் என்றார். நான் அவரிடம் உங்களுக்கு உள்ள பணத்தை மட்டும் வாங்கிக்கொள்ளுங்கள், சப்ரிஜிஸ்டாருக்கு கேட்காதீர்கள் என்று தெரிவித்துவிட்டேன். அவர் கேட்ட பத்திர கூலி தொகையை கொடுத்துவிட்டேன். அதன்பின்னர் 1 வாரமாகியும் அவர் ஆவணத்தை தயார் செய்யவில்லை. அதன்பின்னர் நான் 12.11.2024ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு

புவனப்பிரியா ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு சென்று, அவரிடம் document சம்மந்தமாக கேட்டதற்கு, அவர், சப்ரிஜிஸ்டார் சார்க்கிட்ட உன் பத்திரம் சம்மந்தமாக கேட்டேன், அவர் 4 பத்திரத்துக்கு ரூ.40,000/- வாங்கித்தருமாறு சொன்னதாக என்னிடம் கூறினார். எனவே, நான் அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் காரைக்குடி 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த சார்பதிவாளர் திரு.முத்துப்பாண்டியை நேரடியாக சந்தித்து, என்னுடைய பத்திரங்களை காண்பித்து, பதிவு செய்வது சம்மந்தமாக கேட்டதற்கு, "நீங்கள் வாங்கிய 5 ஏக்கரிலிருந்து ஏற்கனவே 1 ஏக்கர் வாங்கிய திருமதி.இந்துமதி என்பவர் அந்த இடத்திற்கு பாதை இல்லையென்று தாவா மனு எங்கள் அலுவலகத்தில் கொடுத்துள்ளார்" என்று சொன்னார். நான் அவரிடம் "அந்த இடத்திற்கு பாதை FMB-இல் உள்ளது, சுத்தம் பண்ணி கொடுத்துட்டேன், அதுல எந்த வில்லங்கமும் இல்லை" என்று சொன்னேன். அதற்கு அவர், "நான் Document writer புவனப்பிரியாவிடம் பேசிக்கொள்கிறேன், அவர் சொல்றபடி செய்யுங்க, நாளைக்கு பத்திரம் பதிஞ்சுருவோம்" என்று கூறினார். அதன்படி அடுத்த நாள் 13.11.2024ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் மேற்படி பத்திர பதிவு அலுவலகத்திற்கு பத்திரப்பதிவு சம்மந்தமாக கிரையம் வாங்கியவர்கள் மற்றும் சாட்சிகளுடன் சென்றேன். சார்பதிவாளர் ஆவணங்களை சரிபார்த்துவிட்டு எங்களை காத்திருக்கும்படி கூறினார். சிறிது நேரத்தில் ஆவண எழுத்தர் புவனப்பிரியாவிடமிருந்து எனக்கு Call வந்து cut ஆகிவிட்டது. நான் எனது அலைபேசி எண்.7305555550-லிருந்து புவனப்பிரியாவை அவரது அலைபேசி எண்.7397690645-ல் மதியம் சுமார் 1 மணிக்கு தொடர்புகொண்டபோது, அவர் என்னிடம் "document பதிவதற்கு சப்ரிஜிஸ்டர் சார் ரூ.1 லட்சம் உன்கிட்ட வாங்கச் சொல்றாங்க" என்று சொன்னார், அதற்கு நான் அவரிடம் இப்ப என்னிடம் பணம் இல்லை என்று சொன்னதால், சப்ரிஜிஸ்டர் பத்திரத்தை மட்டும் பதிந்துவிட்டு, எங்களுடைய பத்திரத்தை ரிலீஸ் பண்ணமால் நிலுவையில் வைத்துவிட்டார். இதுசம்மந்தமாக நேற்று, 14.11.2024ம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு காரைக்குடி எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, சார்பதிவாளர் திரு.முத்துப்பாண்டியை சந்தித்து, நான் கிரையம் செய்து கொடுத்த ஆவணங்கள் சம்மந்தமாக கேட்டதற்கு, அவர் என்னிடம், நீங்க பணம் கொடுக்காததனால

documents-களை நிலுவையில் வைத்திருக்கிறேன், document writer புவனப்பிரியா சொன்ன பணத்தை அவங்ககிட்ட கொடுங்க, அப்பத்தான் document release பண்ண முடியும் என்று சொன்னார். நான் அவரிடம் சார், ரொம்ப சிரமத்துல இருக்கிறேன், பணம் கையில இல்லை, ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க முடியாது, கொஞ்சம் குறைத்து பண்ணிக்கொடுங்க என்று சொன்னேன். அதற்கு அவர், "ரூ.60000/-த்தை நீங்க பத்திரம் பதிஞ்ச document writer புவனப்பிரியாக்கிட்ட கொடுங்க, பணம் கொடுத்தால்தான் documents கிடைக்கும்" என்று தெரிவித்துவிட்டார். அதன்பின்னர் மாலை சுமார் 6.30 மணிக்கு மேற்படி புவனப்பிரியா ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு அவரது அலுவலகம் பூட்டியிருந்ததனால், ஆவண எழுத்தர் புவனப்பிரியாவை அலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது, அவர் என்னிடம், "இப்பத்தான் சப்ரிஜிஸ்டர் சார் என்னிடம் போன்ல பேசினாங்க, உனக்கு பத்திரம் பதிஞ்சதுக்கு பணம் ரூ.60,000/-த்தை உன்கிட்ட வாங்கிக்கொடுக்க சொன்னாங்க, நீ நாளைக்கு ஆபிசுக்கு வந்து பணத்தை என்கிட்ட கொடுத்திடு" என்று சொன்னார். நான் "நாளைக்கு பத்திரம் வாங்கிக்கொள்ளலாமா" என்று கேட்டதற்கு அவர் என்னிடம், "அது ஒரு விஷயமே இல்லை, பத்திரத்தை வாங்கிக்கொள்ளலாம்" என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. ஆகவே, என்னிடம் பணம் ரூ.60,000/- லஞ்சம் கேட்ட காரைக்குடி எண்.2 இணை சார்பதிவாளர் திரு.முத்துப்பாண்டி மற்றும் ஆவண எழுத்தர் திரு.புவனப்பிரியா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx.

Sir, Received the complaint on 15.11.2024 at 07.15 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.12/2024 u/s 7(a) and 12 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 15.11.2024 at 08.00 hrs and took up for

investigation. sd.A.John Britto, Dy. Superintendent of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

DSP
V/AC
Sivagangai
15/11/24